**இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டுக் கோருரிமை தீர்ப்பாயம், சங்கரன்கோவில்**
**(சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்)**

**முன்னிலை: திரு. P. மகேந்திர வர்மா, B.A., B.L.,**
**இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டுக் கோருரிமை**
**தீர்ப்பாய நடுவர், சங்கரன்கோவில்**

**2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 01 ஆம் நாள் சனிக்கிழமை**
(திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீ பராபவ வருடம் ஆடி திங்கள் 16 ம் நாள்)

**இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டுக் கோருரிமை அசல் மனு எண்.98/2018**

(CNR No.**TNTS07-000662-2018)**

மாரியம்மாள் . . . மனுதாரர்

1. சுந்தர்
2. அருண்செல்வா
3. கிளை மேலாளர்,
   யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடடு.,
   மெயின்ரோடு, சங்கரன்கோவில் . . . எதிர்மனுதார்கள்

இம்மனுவானது கடந்த 16.07.2026 ஆம் தேதியன்று என் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர்.பெ.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர்.எஸ்.செல்வக்குமார் அவர்கள் ஆஜராகியும், மேற்படியார்கள் தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லாததாலும், மேற்படியார்களை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாமலும், எதிருரை தாக்கல் செய்யாமலும் இருந்து வந்ததால் ஒருதலைபட்சமாக வைக்கப்பட்டும், 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர்.பி.எஸ்.வேலாயுதம் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் மற்றும் 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனு மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உ த் த ர வு**

விபத்தினால் மனுதாரர் மாரியம்மாள் என்பவருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு எதிர்மனுதாரர்களிடமிருந்து ரூ.17,83,000/-மும், அத்தொகைக்கு பின்வட்டியும் மற்றும் வழக்கு செலவுத்தொகையும் கோரி மனுதாரரால் இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டுக் கோருரிமை சட்டம் பிரிவு 166 இன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்:**

மனுதாரர் விவசாய வேலை செய்துவிட்டு வாசுதேநவல்லூர் கிராமத்தை சேர்ந்த உடையார் என்பவரின் இருசக்கர வாகனமான டிவிஎஸ் எக்சல் வாகனத்தின் பின் இருக்கையில் அமர்ந்து வாசுதேவநல்லூர் வருவதற்காக வேண்டி உடையார் ஆத்துவழி செல்வதாக கூறி மனுதாரரை மேல்பக்கம் உள்ள ஆத்துவழி பஸ் நிறுத்தத்தில் இறக்கிவிட்டுள்ளார். மேற்படி மனுதாரர் ரோட்டை கடந்து கீழ்புறமாக சென்று வாசுதேவநல்லூர் செல்வதற்காக வேண்டி மதுரை- தென்காசி தேசிய நெடுஞ்சாலையின் மத்தியில் உள்ள செண்டரில் 13.11.2017 ஆம் தேதி சாயங்காலம் 6.45 மணியளவில் நிற்கும்போது 1ம் எதிர்மனுதாரர், 2ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட TN 79 D 2425 என்றள பதிவெண் கொண்ட யமஹா FZ 250 என்ற வாகனத்தை தெற்கேயிருந்து வடக்கு நோக்கி ஓட்டி வந்தவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதி கீழே தள்ளிவிட்டார். இதனால் மனுதாரருக்கு வலது கை புஜம் இறங்கியும், வலது கை முழுவதும் வீக்க காயம், இரத்த காயம், உடல் முழுவதும் ஊமைக்காயமும் ஏற்பட்டது. இதனை பார்த்த அருகில் இருந்தவர்களும், மனுதாரரின் கணவரும் சிவகிரி அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். பின்பு மேல் சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அதன் பின்னர் மேல் சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு மனுதாரர் 14.11.2017 ஆம் தேதி முதல் 27.11.2017 ஆம் தேதிவரை உள்நோயாளியாகவும், வெளி நோயாளியாகவும் சிசிக்கை பெற்றார். அதன் பின்பு கொடுத்த புகாரின் பேரில் வாசுதேவநல்லூர் காவல்நிலையத்தில் விபத்தை ஏற்படுத்திய

2ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் ஓட்டுநரான 1ம் எதிர்மனுதாரரின் மீது முதல் தகவல் அறிக்கை எண்.260/2017, இதச பிரிவுகள் 279, 337ன் கீழ் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது.

2.2. மனுதாரர் விபத்திற்கு முன்பு விவசாயம் செய்து அதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.20,000/-ம் வரை சம்பாதித்து வந்தார். விபத்திற்கு பின்பு முன்பு பார்த்ததுபோல் வருமானம் ஈட்ட முடியவில்லை. எனவே, எதிர்மனுதார்கள் கூட்டாகவும், தனித்தனியாகவும் மனுதாருக்கு இழப்பீடாக ரூ.17,83,000/- கொடுக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். எனவே, எதிர்மனுதார்களிடமிருந்து ரூ.17,83,000/- இழப்பீடு கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>**3 ஆம் எதிர்மனுதாரின் எதிருரையின் சுருக்கம்**</u>:

மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் தவறானது.

கடந்த 13.11.2017 ஆம் தேதியன்று மாலை 6.45 மணியளவில் பதிவு எண்.TN 79 D 2425 என்ற பதிவெண் கொண்ட யமஹா இருசக்கர வாகனத்தின் அதன் ஓட்டுநர் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஆத்துவழி பேருந்து நிலையத்திற்கு முன்பாக ஓட்டிச் சென்ற போது, காயம்பட்டவர் கவனக்குறைவாக சாலையினை கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி கடந்ததால், இருசக்கர வாகனம் லேசாக மோதியதில் மனுதாருக்கு லேசான காயம் ஏற்பட்டது. மனுதாரர் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றார் என்று சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் மறுக்கப்படுகிறது. மனுதாரர் கோரியுள்ள இழப்பீடு அதிகமானதாகும். 3 ஆம் எதிர்மனுதாரர், மனுதாருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல. எனவே இந்த மனுவானது இந்த எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. மனுதாரரின் மனுவுரை, 3ம் எதிர்மனுதாரரின் எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்த இத்தீர்ப்பாயம், இம்மனுவின் தீர்வுக் காக கீழ்க்கண்ட பிரச்சினைகளை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டுள்ளது:

**<u>ஆய்வுக்குரிய பிரச்சினைகள்:</u>**

1. விபத்திற்கு யாருடைய கவனக்குறைவு காரணம்?
2. மனுதாருக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதா? அவ்வாறெனில் அதை வழங்க பொறுப்புடையவர் யார்?
3. மனுதாருக்கு கிடைக்ககூடிய இழப்பீட்டு தொகை எவ்வளவு?
4. மனுதாருக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் என்ன?

5. மனுதாரர் தரப்பில், மனுதாரர் மாரியம்மாள் என்பவர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ஷையார் மூலம் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் நீ.ம.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் மனுதாரர் தரப்பில் தனிநபர் சாட்சியாக வெள்ளத்துரை என்பவர் எ.ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படியார் மூலம் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. 3ம் எதிர்மனுதார் தரப்பில், யாதொரு வாய்மொழி சாட்சியமோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை. இரு தரப்பு வாதங்கள் கூர்ந்து கேட்கப்பட்டன. சாட்சிய, சான்றாவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டன.

6. **<u>பிரச்சினை எண்.1–க்கான தீர்வு:</u>**

மனுதாரர் தரப்பில் விசாரணை செய்யப்பட்ட ம.சா.1 மற்றும் ம.சா.2 தங்களது சாட்சியத்தில் கடந்த 13.11.2017 ஆம் தேதியன்று மனுதாரர் விவசாய வேலை செய்துவிட்டு வாசுதேநவல்லூர் கிராமத்தை சேர்ந்த உடையார் என்பவரின் இருசக்கர வாகனமான டிவிஎஸ் எக்சல் வாகனத்தின் பின் இருக்கையில் அமர்ந்து வாசுதேவநல்லூர் வருவதற்காக வேண்டி வருகையில், உடையார் ஆத்துவழி செல்வதாக கூறி மனுதாரரை மேல்பக்கம் உள்ள ஆத்துவழி பஸ் நிறுத்தத்தில் இறக்கிவிட்டுள்ளார் என்றும், மேற்படி மனுதாரர் ரோட்டை கடந்து கீழ்புறமாக சென்று வாசுதேவநல்லூர் செல்வதற்காக வேண்டி மதுரை– தென்காசி தேசிய

நெடுஞ்சாலையின் மத்தியில் உள்ள செண்டரில் 13.11.2017 ஆம் தேதி சாயங்கலம் 6.45 மணியளவில் நிற்கும்போது 1ம் எதிர்மனுதாரர், 2ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட TN 79 D 2425 என்ற பதிவெண் கொண்ட யமஹா FZ 250 என்ற வாகனத்தை தெற்கேயிருந்து வடக்கு நோக்கி ஓட்டி வந்தவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதி கீழே தள்ளிவிட்டார் என்றும், இதனால் மனுதாரருக்கு வலது கை புஜம் இறங்கியும், வலது கை முழுவதும் வீக்க காயம், இரத்த காயம், உடல் முழுவதும் ஊமைக்காயமும் ஏற்பட்டது என்று சாட்சியம் அளித்துள்ளனர் என்பது தெரியவருகிறது.

6.2. மேலும், மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களில் ம.சா.ஆ.3, முதல் தகவல் அறிக்கை ஆவணத்தினை பரிசீலனை செய்கையில், 2ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட TN 79 D 2425 என்ற பதிவெண் கொண்ட Yamaha FZ 250 என்ற இருசக்கர வாகனத்தினை அதன் ஓட்டுநரான 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக வாசுதேவநல்லூர் காவல்நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

6.3. மேற்படி மனுதாரர் தரப்பு ம.சா.1 மற்றும் ம.சா.2ன் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம், 2ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட TN 79 D 2425 என்ற பதிவெண் கொண்ட Yamaha FZ 250 என்ற இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுநரான 1ம் எதிர்மனுதாரர் கவனக்குறைவாக ஓட்டி வந்ததால் விபத்து நடந்துள்ளது என்பது நிரூபணமாகிறது.

6.4. மேலும் 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் யாரும் சாட்சிகளாக விசாரணை செய்யப்படவில்லை.

6.5. எனவே, மேற்கண்ட பரிசீலனைகளிலிருந்து, வழக்கு விபத்தானது, 2ஆம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் ஓட்டுநரான 1ம் எதிர்மனுதாரரின் கவனக்–

குறைவின் காரணமாக விபத்து ஏற்பட்டுள்ளது என இவ்வாயம் முடிவு செய்து, அவ்வாறே இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

7. <u>**பிரச்சினை எண்.2—க்கான தீர்வு**</u>:

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணமான ம.சா.ஆ.4 விபத்து பதிவேட்டை பரிசீலனை செய்ததில், மனுதாரருக்கு விபத்தின் காரணமாக கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. எனவே, வழக்கு விபத்தினால் மனுதாரருக்கு காயம் ஏற்பட்டுள்ளதால் மேற்படி காயங்களுக்காக மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கது என இவ்வாயம் தீர்மானிக்கிறது.

7.2. மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கது என தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், ஷை இழப்பீட்டை யார் வழங்க பொறுப்புடையவர் என்பது குறித்து பரிசீலனை செய்கையில், ஏற்கனவே, இவ்வாயம் மேலே பிரச்சினை எண்.1ல், இந்த விபத்தை ஏற்படுத்திய 2ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தின் ஓட்டுநரான 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவினால்தான் விபத்து நடைபெற்றது என்பதாக தீர்வு காணப்பட்டுள்ள நிலையில், வாகன உரிமையாளரான 2ஆம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு உரிய இழப்பீட்டை வழங்கக் கடமைப்பட்டவர் ஆவார்.

7.3. மேலும் ம.சா.ஆ.7 மோட்டார் வாகன ஆய்வறிக்கையை பரிசீலிக்கையில், 2ஆம் எதிர்மனுதாருக்கு சொந்தமான இருசக்கர வாகனமானது 3ஆம் எதிர்மனுதாரரான காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதும், மேற்படி காப்பீடானது விபத்து சமயத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்பது தெரிய வருகிறது. எனவே, 2ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் காப்பீட்டாளர் என்ற நிலையில் 3ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனமானது 2ம் எதிர்மனுதாரர் செலுத்தவேண்டிய இழப்பீட்டு தொகையை செலுத்த கடமைப்பட்டவர் ஆவார்.

7.4. எனவே மேற்கண்ட பரிசீலனைகளிலிருந்து 2ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டாளரான 3ம் எதிர்மனுதாரர் நிறுவனம் மனுதாரருக்கு இழப்பீட்டு தொகையை செலுத்த கடமைப்பட்டது என முடிவு செய்து அவ்வாறே இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

8. **<u>பிரச்சினை எண்.3–க்கான தீர்வு</u>:**

**<u>பகுதி நிரந்தர ஊனத்திற்காக:</u>**

8.2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணமான ம.சா.ஆ.4 விபத்து பதிவேடு ஆவணத்தை பரிசீலனை செய்ததில் இருந்து, மனுதாரருக்கு விபத்தின் காரணமாக கொடுங்காயங்கள் ஏற்பட்டுள்ளன என்பதும், அக்காயத்திற்கு மனுதார் உள்நோயாளியாக மற்றும் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார் என்பதும் தெளிவாகிறது. மேலும், நீ.ம.சா.ஆ.1, மாவட்ட மருத்துவக் குழு வழங்கிய இயலாமைச் சான்றிதழ் மூலம் மனுதாரருக்கு விபத்தின் காரணமாக 19.5 சதவீதம் பகுதி நிரந்தர ஊனம் (Partially Permanent in nature) ஏற்பட்டுள்ளது எனவும் நிரூபிக்கப்பட்டுள்ளது. விபத்தானது கடந்த 2017ஆம் ஆண்டு நடைபெற்றுள்ளது என்பதால் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள 19.5 சதவீத ஊனத்திற்கு, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றமானது V.Padma Vs Managing Director, Tamil Nadu State Transport Corporation (VPM) 2024 (2) TN MACT 679 எனும் வழக்கில் பின்பற்றப்பட்டுள்ள வழிமுறைகளின் படி ஒரு சதவீத ஊனத்திற்கு ரூ.8,000/– (ரூபாய் எட்டாயிரம்) வீதம், மனுதாரரின் 19.5% ஊனத்திற்கு ரூ.1,56,000/– (8,000 X 19.5% = 1,56,000) ( ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பத்தி ஆறாயிரம்) பெற மனுதாரர் உரிமை உடையவர் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**<u>வலி மற்றும் வேதனைக்காக:</u>**

8.3. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களான ம.சா.ஆ.4 விபத்து பதிவேடு ஆவணத்தின் பரிசீலனையிலிருந்து, மனுதாரருக்கு விபத்தின் காரணமாக வலது காலில் கொடுங்காயங்கள் ஏற்பட்டுள்ளது என்பதும், அக்காயத்திற்கு மனுதார் உள்நோயாளியாக சிகிச்சைகள் மேற்கொண்டுள்ளார் என்பதும் தெளிவாகிறது. மனுதாரர் எடுத்துள்ள தொடர் சிகிக்சையில் இருந்தும், அவருக்கு

மேற்கொள்ளப்பட்டுள்ள மருத்துவ சிகிச்சைகளிலிருந்தும், மனுதாருக்கு விபத்தினால் ஏற்பட்ட காயங்களின் தன்மையை அறிய முடிகிறது. மேலும், மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயத்தை கருத்திற்கொண்டும், மனுதாரர் விபத்தினால் உள் மற்றும் வெளிநோயாளியாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார் என்பதைக் கருத்திற்கொண்டும், விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்கு ரூ.40,000/– (ரூபாய் நாற்பதாயிரம்) வழங்கினால் நியாயமான இழப்பீடாக இருக்கும் என இவ்வாயம் தீர்மானிக்கிறது.

**<u>சிகிச்சையின்போது ஏற்பட்ட வருமான இழப்புக்காக:</u>**

8.4. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களான ம.சா.ஆ.4 விபத்து பதிவேடு ஆவணத்தின் பரிசீலனையிலிருந்து, மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்டுள்ள காயங்களின் காரணமாக மனுதாரருக்கு சிகிச்சை மேற்கொண்டதன் காரணமாக குறைந்தது ஒரு மாதமாக பணிக்கு சென்றிருக்க முடியாது என்பதை அறியமுடிகிறது. மேலும் மனுதாரர் விபத்திற்கு முன்பு மனுதார் நன்கு திடகாத்திரமாக இருந்து, சொந்தமாக விவசாயம் செய்து அதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.20,000/–ம் வரை சம்பாதித்து வந்ததாக கூறியுள்ளனர். அதற்கான எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் இம்மனுவில் முன்னிடப்படவில்லை. எனவே, விபத்து 2017 ஆம் ஆண்டு நடைபெற்றுள்ளது என்பதால், மனுதாரருக்கு தோராய மாத வருமானமானது ரூ.10,000/– என நிர்ணயக்கப்படுகிறது. மேலும், மனுதாரர் தனக்கு ஏற்பட்ட காயங்களின் காரணமாக, 2 மாதத்திற்கு பணிக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருக்கும் என இவ்வாயம் முடிவு செய்கிறது. எனவே, மனுதாருக்கு 2 மாதத்திற்கான வருமான இழப்பாக ரூ.20,000/–ம் கிடைக்கத்தக்கது என இவ்வாயம் தீர்மானிக்கிறது.

**<u>சிகிச்சையின்போது உடனிருந்து கவனித்தவரின் வருமான இழப்புக்காக:</u>**

8.5 வழக்கு விபத்தில் காயமடைந்த மனுதாரை, மருத்துவ சிகிச்சையின்போதும், அதன்பின்பு வெளிநோயாளியாக இருந்தபோதும் உடனிருந்து கவனித்துக் கொள்ள தனியாக ஒரு நபர் தேவைப்பட்டிருக்கும் என்பதில் எவ்வித

ஐயப்பாடும் இல்லை. மனுதார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மருத்துவ ஆவணங்களின் பரிசீலனையிலிருந்து, மனுதாரரை குறைந்தது ஒரு மாதமாவது யாராவது ஒருநபர் உடனிருந்து கவனிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும் என்பதை இவ்வாயம் கருத்திற்கொள்கிறது. எனவே, மனுதாரரை உடன் இருந்து கவனித்து கொண்டவரின் வருமான இழப்பாக ஒரு மாதத்திற்கு ரூ.5,000/– ம் பெற மனுதாரர் உரிமையுடையவர் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**<u>போக்குவரத்து செலவுக்காக:</u>**

8.6. மேலும், மனுதாரர் தரப்பில் போக்குவரத்து செலவுக்கான ரசீதுகள் எதுவும் தாக்கல் செய்யப்படாதபோதிலும், மனுதார் மருத்துவ சிகிச்சைக்காக பலதரப்பட்ட மருத்துவமனைகளுக்கு சென்று சிகிச்சைகள் மேற்கொண்டுள்ள விபரங்கள், மனுதார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்களிலிருந்து துலங்குகிற நிலையில், ரூ.2,000/– மட்டும் போக்குவரத்து செலவிற்காக மனுதாருக்கு கிடைக்கத்தக்கது என இவ்வாயம் தீர்மானிக்கிறது.

**<u>ஊட்டச்சத்துக்காக:</u>**

8.7. மேலும் மனுதாரருக்கு ஊட்டசத்து உணவிற்காக மனுதாரர் ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம்) பெற உரிமையுடையவர் என்று இவ்வாயம் தீர்மானிக்கிறது.

**<u>மருத்துவ செலவுக்காக:</u>**

8.8. மனுதாரர் தரப்பில் மருத்துவ செலவுக்காக ரூ.2,00,000/–ம் செலவு செய்ததாக தனது மனுவில் சொல்லப்பட்டுள்ள போதிலும் மருத்துவ செலவு செய்ததற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் மருத்துவ செலவுக்கான தலைப்பின் கீழ் மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதல்ல என இவ்வாயம் தீர்மானிக்கிறது. மேற்கண்ட வகையில் மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய இழப்பீடு தொகை பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்படுகிறது.

| வ.எண் | இழப்பீடு தலைப்புகளில் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | 19.5% பகுதி நிரந்தர ஊனத்திற்காக (8,000 X 19.5% = 1,56,000) | ரூ.1,56,000 |
| 2 | வலி மற்றும் வேதனைக்காக | ரூ. 40,000 |
| 3. | மாத வருமான இழப்புக்காக | ரூ. 20,000 |
| 4 | உடனிருந்தவர் செலவுக்காக | ரூ. 5,000 |
| 5 | போக்குவரத்து செலவுக்காக | ரூ.2,000 |
| 6 | ஊட்டசத்து உணவிற்காக | ரூ. 20,000 |
| 7 | மருத்துவ செலவுக்காக | இல்லை |
| | மொத்தம் | ரூ.2,43,000/- |

8.9. எனவே, மேலே சொல்லப்பட்ட காரணங்களின் அடிப்படையில், மனுதாரர், ரூ.2,43,000/- இழப்பீட்டு தொகையை 3ம் எதிர்மனுதாரரிடமிருந்து பெற உரிமை உடையவர் என பிரச்சினை எண்.3-க்கு மேற்சொன்னவாறு தீர்வு காணப்படுகிறது.

9. <u>பிரச்சினை எண்.4-க்கான தீர்வு</u>:

மனுதாருக்கு இழப்பீடாக ரூ.2,43,000/ 3ம் எதிர்மனுதாரரிடமிருந்து கிடைக்கத்தக்கது என்று மேலே இவ்வாயம் முடிவு செய்துள்ள நிலையில், ஷை தொகைக்கு மனுதாருக்கு வட்டியும், இவ்வழக்கு செலவுத்தொகையும் கிடைக்கத்தக்கது என்று தீர்மானித்து, அவ்வாறே இத்தீர்ப்பாயம் பிரச்சினை எண்.4-க்கு மேற்சொன்னவாறு தீர்வு காண்கிறது.

10. (i) இறுதியாக, இம்மனு செலவுத் தொகையுடன் கீழ்க்கண்டவாறு அனுமதிக்கப்படுகிறது.

(ii) 3ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு மொத்த இழப்பீடாக ரூ.2,43,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து நாற்பத்தி மூன்றாயிரம் மட்டும்) அதற்குரிய வட்டியுடன் செலுத்த உத்தரவிடப்படுகிறது.

(iii) மேற்படி இழப்பீட்டுத் தொகையினை மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதி வரையிலும் ஆண்டிற்கு 7.5% பின் வட்டியும் மற்றும் செலவுத்தொகையும் சேர்த்து 3ம் எதிர்மனுதாரர் இரண்டு மாத காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் வங்கி கணக்கில், அதாவது, Indian Bank, Sankarankovil Branch in A/c No:6455813233, IFSC Code: I**DIB**000S008 மூலம் வைப்பீடு செய்ய உத்தரவிடப்படுகிறது.

(iv) இழப்பீடு கோருரிமை மனுவானது மனுதாரரின் தவறுகையால் தள்ளுபடியாகியிருக்கும் காலத்திற்கு வட்டி தொகை கிடைக்கத்தக்கதல்ல என உத்தரவிடப்படுகிறது.

(v) மேற்படி இழப்பீட்டு தொகை மற்றும் அதற்கான வட்டி மற்றும் மனுச் செலவுத்தொகை ஆகிய அனைத்தையும் மனுதாரர் இவ்வாயத்தில் தொகை செலுத்தப்பட்டவுடன் உடனடியாக பெற்றுக்கொள்ளலாமென்று உத்தரவிடப்படுகிறது.

(vi) மனுதாரருக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டு தொகைக்கான குறைவுபடும் நீதிமன்ற கட்டணத்தை இவ்வாயத்தில் செலுத்த மனுதாருக்கு 10 நாட்கள் கால அவகாசம் அளிக்கப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 01-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MAHINDRAVARMA P
Digitally signed by MAHINDRAVARMA P
Date: 2026.08.01 20:18:00 +0530

இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டுக் கோருரிமை
தீர்ப்பாய நடுவர், சங்கரன்கோவில்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>:

ம.சா.1 திருமதி.மாரியம்மாள் (மனுதாரர்)

ம.சா.2 திரு.வெள்ளத்துரை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>:** **இல்லை**

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>:**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | --- | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது |
| ம.சா.ஆ.2 | --- | மனுதாரர் வங்கி கணக்கு புத்தகம் நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது |
| ம.சா.ஆ.3 | --- | வாசுதேவநல்லூர் காவல்நிலைய குற்ற எண்.260/2017 ன் முதல் தகவலல் அறிக்கை சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.4 | --- | விபத்து பதிவேடு சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.5 | --- | மாதிரி வரைபடம் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.6 | --- | பார்வை மகஜர் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.7 | --- | TN 79 D 2425 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.8 | --- | குற்றப்பத்திரிக்கை சான்றிட்ட நகல் |

**<u>எதிர்மனுதார்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>:** **இல்லை**

**<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u>:**

| | | |
|---|---|---|
| நீ.ம.சா.ஆ 1 | -- | மனுதாரரின் இயலாமை சான்று |

MAHINDRAVARMA P

Digitally signed by MAHINDRAVARMA P
Date: 2026.08.01 20:18:08 +0530

இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டுக் கோருரிமை
தீர்ப்பாய நடுவர், சங்கரன்கோவில்.

**இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டு**
**கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்)**
**சங்கரன்கோவில்**

**இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டு**
**கோருரிமை அசல் மனு எண்.98/2018**

**உத்தரவு (அசல்/வரைவு)**

**நாள் 01.08.2026**